**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

**Minutes of the Public Hearing Meeting of M/s. Kalpana, S.F.No.49/2 (Part-2) of Adaiyur Village, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District over an extent of 2.00.0 Hectares held on 08.07.2026 @ 11.00 am at M/s. Sri Vijay Balaji Marriage Hall, Kanchi Road (Girivalam Road), Tiruvannamalai Taluk, Tiruvannamalai District.**

**Participants:**

1. Thiru. T. D. Selvam
   Revenue Divisional Officer, Tiruvannamalai.
   (Representative of the District Collector, Tiruvannamalai)

2. Thiru. V. Jayakumar
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

3. Thiru. K. Prem Kumar
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai

4. Thiru. S. Mohanaraman
   Tahsildar, Tiruvannamalai.

5. Thiru. Bala Subramani Project Consultant,
   M/s. Global Mining Solutions, Salem.

6. Participants – As per List.

**District Environmental Engineer:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board, welcomed the Revenue Divisional Officer, Tiruvannamalai; the general public; environmental activists; press friends; and officials of the Police Department and other Government Departments who had come to attend the Public Hearing held in connection with obtaining Environmental Clearance for the proposed M/s. Kalpana Rough Stone Quarry, situated in S.F. No. 49/2 (Part-2), Adaiyur Village, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District.

Further, he stated: "As per the guidelines of the Environmental Impact Assessment Notification, 2006, in the case of granting Environmental Clearance for such rough stone quarries, there is a rule in force whereby the opinions of the public belonging to that area are heard, and the Environmental Impact Assessment Authority grants the Environmental Clearance on the basis of those opinions. Accordingly, the management of this quarry, one month ago, obtained the Terms of Reference (ToR) order from the Environmental Impact

Assessment Authority and submitted the application to the Tamil Nadu Pollution Control Board. In accordance with the guideline procedure relating to this, the details of this Public Hearing being conducted were already published as a notice in the Tamil and English newspapers dated 02.06.2026 and were made available for public viewing. Furthermore, by way of reminder, public announcements were also made in the areas surrounding Adaiyur Village through an auto fitted with a loudspeaker, through pamphlets, and through wall posters."

**Revenue Divisional Officer**:

Following this, the Revenue Divisional Officer, Tiruvannamalai, stated that the quarry is proposed over an extent of 2 hectares in S.F. No. 49/2 (Part-2), Adaiyur Village, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District. In this regard, he requested the public to express their opinions. He stated that, since Environmental Clearance is being granted on this basis, the public may come forward one by one and express their opinions.

Following this, the District Environmental Engineer stated that, on behalf of the owner of the proposed rough stone quarry, their Project Consultant would explain the presentation regarding the project to the public, and that thereafter the public may express their opinions and observations regarding the project. He requested that, while doing so, the members of the public come forward one by one, state their name and the name of their village, and register their opinions. He further stated that all of this would be videographed and audio-recorded, and that, with the approval of the District Collector, the proceedings and notes of this meeting would be sent to the State Environmental Impact Assessment Authority.

**Project Proponent, Environmental consultant, M/s. Global Mining Solutions, Salem**

Thiru. Bala Subramani of M/s. Global Mining Solutions, Salem, the Environmental Impact Assessment Consultant for M/s. Kalpana Rough Stone Quarry, welcomed all those who had come to attend the Public Hearing and explained in detail, through an audio-visual presentation, the operation of the rough stone quarry project and the Environmental Management Plan that would be undertaken during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, stated that the public may give their opinions. Before registering their opinions, he requested the public to state their name and the name of their village and to record their opinions briefly and clearly.

Accordingly, the following members of the public expressed their opinions and suggestions.

**1. Thiru. Dhinakaran, Adaiyur Village:**

Thiru. Dhinakaran conveyed his greetings to everyone present and stated that he had previously served as a Councillor of the Adaiyur Panchayat. He stated that, since this project would secure funds for the school in their village, it should be brought in quickly and made useful to the public, and thus concluded his remarks.

**2. Thiru. Murugan, Adaiyur Village:**

Thiru. Murugan stated that he had studied up to the 10th standard and that he had to travel outside the village in search of work. He further stated that, if this stone quarry is established, all the people living in the surrounding area would get good employment and income. Therefore, he said that if the Revenue Divisional Officer completes this work immediately, employment would be available to all the public, and then took leave.

**3. Thiru. Ramamurthy, Adaiyur Village:**

Thiru. Ramamurthy stated that he was a former President of the Panchayat Union. He further stated that, in the present situation, their village has no source of revenue, and that the village people benefit from this stone quarry. Continuing, he said that everyone should extend their cooperation to this project, and thus concluded his remarks.

**4. Tmt. Komathi, Adaiyur Village:**

Tmt. Komathi said, "Greetings to everyone, I live on Pillaiyar Koil Street in Adaiyur." She further stated that she had been living there for 35 years and that all their lands are elevated (High-lying) land. She added that, since the coming of this quarry provides employment to everyone, she is indeed happy, and thus concluded her remarks.

**5. Thiru. Ranjith, Adaiyur Village:**

Thiru. Ranjith stated: "None of the general public of our village are present here; only about four persons are here. The full details were not conveyed in the PowerPoint presentation regarding this project. All the people are within the village. Therefore, only if a Gram Sabha meeting is held by gathering all the general public of the village and conducting the meeting will it be understood; otherwise the village people will not understand," and thus raised a question. He further said, "Those who spoke before me will say that good things will happen because this quarry brings revenue, and then leave. None of the farmers around this quarry are present here. Only if the people living in our village are asked will it be known what the impact is. There is no water in the

wells there, and therefore agriculture is affected. Only those living in the surrounding area will know the impact; if a meeting is held separately here, what will we know?"

In response, the District Environmental Engineer stated, "A public notice regarding this project was published in the Tamil and English newspapers a month ago, and, moreover, two days ago, public announcements were made in the areas surrounding Adaiyur Village through an auto fitted with a loudspeaker and through pamphlets." He further stated, "All the opinions you have expressed will be recorded and sent to the State Environmental Impact Assessment Authority." To this, Thiru. Ranjith asked whether this meeting was one that grants approval for the project. Following this, the District Environmental Engineer replied that this meeting is one in which opinions are recorded and sent to the higher authority, and that it is not a meeting that makes the decision.

**6. Thiru. Anandaraj, Adaiyur Village:**

Thiru. Anandaraj stated that there is no proper road around this quarry. Therefore, he stated that it is an inconvenience to the public and difficult for transport. He stated that a great deal of dust is raised by this quarry, and that farmers and those cultivating flowering plants are thereby affected. He stated that when goats and cattle cross the road, the lorries travel at high speed, and that the lorry drivers drive the vehicles fast in order to make profit.

He again stated that there is no proper road facility for the quarry, and that, since it is a single-lane path during the rainy season, the people are greatly affected. He further stated that appropriate action should be taken to control the speed of the lorries. Finally, he said that if permission is granted for the quarry with a proper road facility, they would have no problem, and that they are being greatly inconvenienced due to the lack of a proper road facility, and thus concluded his remarks.

Thereafter, no one from among the public came forward to express any opinion.

**District Environmental Engineer:**

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, informed the gathering that if any member of the public wished to express further views, they may come forward and do so. He further stated that those who wished to submit their views in writing could submit their petitions before the officials present in the meeting hall.

After the members of the public had submitted their petitions, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, expressed his sincere gratitude, on behalf of the District

Administration and the Tamil Nadu Pollution Control Board, to all the members of the public who participated in the event and expressed their views either orally or through petitions, as well as to the government officials, members of the press, police personnel, and all others who attended the proceedings.

He further informed that all the views and objections recorded during the public hearing, along with the audio and video recordings and the Tamil and English copies of the proceedings, would be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu, for consideration while granting Environmental Clearance. He stated that all the views and representations made by the public would be taken into consideration during the process of granting Environmental Clearance. Thereafter, he declared the Public Hearing meeting concluded.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer,**
**Tiruvannamalai.**

5/6)

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், காஞ்சி சாலை, கிரிவலம் சாலையில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ விஜய் பாலாஜி திருமண மண்டபத்தில் 08.07.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், ஆடையூர் கிராமம், புல எண். 49/2 (பகுதி-2) -ல் 2.00.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். கல்பனா, சாதாரண கல் குவாரி திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்:**

**பங்கேற்றோர்:**

1. திரு. தி.த.செல்வம்
   வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை.
   (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)

2. திரு. வெ. ஜெயக்குமார்
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   திருவண்ணாமலை.

3. திரு. க. பிரேம் குமார்
   உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   திருவண்ணாமலை.

4. திரு. S. மோகனராமன்
   வட்டாட்சியர், திருவண்ணாமலை

5. திரு. பால சுப்பரமணி
   திட்ட ஆலோசகர், தி/ள். குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம்

6. பொதுமக்கள் – இணைப்பில் உள்ளப்படி

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், ஆடையூர் கிராமத்தில் புல எண். 49/2 (பகுதி-2) -ல் அமையவுள்ள தி/ள். கல்பனா, சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த

வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை, பொதுமக்கள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள், பத்திரிக்கை நண்பர்கள், காவல்துறை மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோரை, மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாகவும் வரவேற்றார். மேலும் அவர் கூறுகையில், "இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006ன் வழிகாட்டுதலின்படி இதுபோன்ற சாதாரண கல் குவாரிகள் தொடர்பாக சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் பட்சத்தில் அந்த பகுதியை சார்ந்த பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து, அந்த கருத்துக்களின் அடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதியை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும் என்ற விதி அமலில் உள்ளது. அதன் அடிப்படையில் இந்த குவாரி நிர்வாகத்தினர் ஒரு மாத காலத்துக்கு முன்பு ToR என்ற செயல்பாட்டு ஆணையை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து பெற்று, விண்ணப்பத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் சமர்ப்பித்தனர். இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறையின்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே 02.06.2026 தேதியிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்பாக வெளியிடப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. மேலும், நினைவூட்டும் விதமாக ஆடையூர் கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி வசதியுடன் இயங்கிய ஆட்டோ மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும்,, சுவரொட்டிகள் மூலமாகவும் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

<u>வருவாய் கோட்டாட்சியர்:</u>

அதனை தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், ஆடையூர் கிராமத்தில் புல எண். 49/2 (பகுதி-2) -ல் 2 ஹெக்டேர் அளவில் அமையவுள்ளது. இது தொடர்பாக, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில், சுற்றுச்சூழல் அனுமதி

வழங்கப்படுவதால் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை ஒருவர் பின் ஒருவராக வந்து தெரிவிக்கலாம் என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் பரிசீலனைகளை தெரிவிக்கலாம் எனவும், அவ்வாறு தெரிவிக்கும்போது பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார். மேலும், இவையனைத்தும் ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

**<u>சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை ஆலோசகர், தி/ள். குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம்</u>**

இதனை தொடர்ந்து தி/ள். கல்பனா, சாதாரண கல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு. பால சுப்பரமணி, தி/ள். குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று, சாதாரண கல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும், இதன் செயல்பாட்டின்போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரையை தொடர்ந்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர்

ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1. திரு. தினகரன், ஆடையூர் கிராமம்:**

திரு. தினகரன் அவர்கள், வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, தான் இதற்கு முன்பு ஆடையூர் ஊராட்சி கவுன்சிலராக பணி புரிந்ததாக தெரிவித்தார். இந்த திட்டம் எங்கள் ஊரில் உள்ள பள்ளிக்கு நிதி பெற்றுத்தருவதால், துரிதமாக இத்திட்டத்தை கொண்டுவந்து பொதுமக்களுக்கு பயன்படுத்துமாறு தெரிவித்து தன் உரையை முடித்துக்கொண்டார்.

**2. திரு. முருகன், ஆடையூர் கிராமம்:**

திரு. முருகன் அவர்கள், தான் 10ம் வகுப்பு படித்துள்ளதாகவும், வேலை தேடி வெளியூருக்கு செல்ல வேண்டி இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், இந்தக் கல் குவாரி அமைந்தால் இங்கு சுற்றி உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் நல்ல வேலை மற்றும் வருவாய் கிடைக்கும். ஆகையால், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் இந்த பணியினை உடனடியாக முடித்தால் பொதுமக்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும் என்று கூறி விடைபெற்றார்.

**3. திரு. இராமமூர்த்தி, ஆடையூர் கிராமம்**:

திரு. இராமமூர்த்தி அவர்கள், தான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் என்று கூறினார். மேலும், இன்றைய சூழ்நிலையில் எங்களுடைய கிராமத்திற்கு வருவாய் எதுவும் இல்லை. இந்த கல்குவாரியால் எங்கள் கிராம மக்கள் பயன் அடைகிறார்கள். இதனை தொடர்ந்து, இத்திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**4. திருமதி. கோமதி, ஆடையூர் கிராமம்:**

திருமதி. கோமதி அவர்கள், "அனைவருக்கும் வணக்கம், நான் ஆடையூர் பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கிறேன்" என்று கூறினார். மேலும், தான் 35 ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், தங்கள் நிலங்கள் எல்லாம் மேடான பூமி என்றும் கூறினார். மேலும், இந்த குவாரி வருவதனால் எல்லோருக்கும் வேலை கிடைப்பதால் சந்தோஷமாகத்தான் உள்ளது என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**5. திரு. ரஞ்ஜித், ஆடையூர் கிராமம்:**

திரு. ரஞ்ஜித் அவர்கள் கூறுகையில், "இங்கு எங்க ஊர் பொதுமக்கள் யாருமே இல்லை, ஒரு நான்கு பேர் மட்டும்தான் இருக்கிறார்கள். இத்திட்டம் தொடர்பான பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியில் முழுவதுமாக விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. எல்லா மக்களும் ஊருக்குள்ளதான் இருக்கிறார்கள். எனவே, ஒரு கிராம சபை கூட்டம் நடத்தி ஊர் பொதுமக்களை எல்லோரையும் கூட்டி கூட்டத்தை நடத்தினால்தான் புரியும்; இல்லை என்றால் ஊர் மக்களுக்கு புரியாது" என்று கேள்வி எழுப்பினார். "எனக்கு முன் பேசியவர்கள் வருவாய் வருவதற்காக இந்த குவாரி வருவதனால் நல்லது நடக்கும் என்று சொல்லிப் போய்விடுவார்கள். இந்த குவாரியைச் சுற்றி உள்ள விவசாயிகள் யாரும் இங்கு இல்லை. எங்கள் கிராமத்தில் இருக்கும் மக்களிடம் கேட்டால்தான் என்ன பாதிப்பு என்று தெரியும். அங்கு கிணற்றில் தண்ணீர் இருப்பதில்லை, அதனால் விவசாயம் பாதிப்பு அடைகிறது. சுற்றுவட்டாரப் பகுதியில் இருப்பவருக்குதான் பாதிப்பு தெரியும்; இங்கு தனியாக வந்து கூட்டம் போட்டால் எங்களுக்கு என்ன தெரியும்" என்று கூறினார். அதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், "ஒரு மாதத்திற்கு முன்பே இத்திட்டம் குறித்து தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களில் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது எனவும், மேலும் இரண்டு நாட்களுக்கு முன்பு ஆடையூர் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில்

ஒலிப்பெருக்கி வசதியுடன் இயங்கிய ஆட்டோ மூலமும், துண்டு பிரசுரங்கள் மூலமும் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். மேலும், "தாங்கள் கூறிய அனைத்து கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும்" என்று தெரிவித்தார். இதற்கு திரு. ரஞ்ஜித் அவர்கள், இக்கூட்டமானது இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்கும் கூட்டமா என்று வினவினார். இதனை தொடர்ந்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், இந்தக் கூட்டமானது கருத்துக்களை பதிவு செய்து மேலிடத்திற்கு அனுப்பப்படும் கூட்டம் என்றும், முடிவு செய்யும் கூட்டம் இல்லை என்றும் பதில் அளித்தார்.

**6. திரு. ஆனந்தராஜ், ஆடையூர் கிராமம்:**

திரு. ஆனந்தராஜ் அவர்கள் கூறுகையில், இந்த குவாரியைச் சுற்றிலும் சரியான வழி இல்லை. எனவே, பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது எனவும், போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதாகவும் தெரிவித்தார். இந்த குவாரியால் அதிக தூசிகள் எழுவதாகவும், இதனால் விவசாயிகள் மற்றும் பூச்செடி வைத்து இருப்பவர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். ஆடு, மாடுகள் சாலையை கடக்கும்போது லாரிகள் வேகமாக செல்கின்றன. லாரி ஓட்டுநர்கள் லாபம் பார்ப்பதற்காக வாகனங்களை வேகமாக இயக்குவதாக தெரிவித்தார். மேலும், குவாரிக்கு சரியாக சாலை வசதி இல்லை என்று மீண்டும் தெரிவித்து, மழை காலங்களில் ஒரு வழிப் பாதையாக இருப்பதால் மக்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகின்றனர் என்றும் தெரிவித்தார். மேலும், லாரிகளின் வேகத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இறுதியாக, குவாரிக்கு முறையான சாலை வசதியுடன் அனுமதி அளித்தால் எங்களுக்கு எதுவும் பிரச்சினை இல்லை என்றும், முறையான சாலை வசதி இல்லாததால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாகவும் கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>**

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் வேறு யாரேனும் கருத்து கூறுவதாக இருந்தால் வந்து கூறலாம் என்றார். மேலும், தங்கள் கருத்துக்களை மனுக்கள் வாயிலாக தெரிவிக்க வேண்டியவர்கள், மனுக்களை இவ்வரங்கில் அதிகாரிகள் முன்பு சமர்ப்பிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

பொதுமக்கள் தங்களது மனுக்களை வழங்கிய பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும், மனுக்கள் வாயிலாக தங்களது கருத்துக்களையும் தெரிவித்த பொதுமக்கள், இதர அரசு அலுவலர்கள், பத்திரிக்கை நண்பர்கள், காவல்துறை அன்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பதிவு செய்யப்பட்ட அனைத்து கருத்துக்களும் ஒலி, ஒளி வாயிலாகவும், கூட்ட நடவடிக்கைகளின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் அனைத்தும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும். அங்கு தங்களது அத்தனை கருத்துக்களும் அனுமதி வழங்கும் பட்சத்தில் கருத்தில் கொள்ளப்படும் என்ற தகவலைத் தெரிவித்து, இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றதாகத் தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை.**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**திருவண்ணாமலை.**